# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No.** 244/2019

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அப்துல் குபூர் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 31th day of April 2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான்.

கடந்த 11.01.2019 ம் தேதி சுப்பையாநாடார் ஒரு உயில் பத்திரத்தை எழுதப்போவதாகவும் அதில் சாட்சி கையொப்பமிட வரவேண்டும் என கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அவரது வீட்டிற்கு சென்றபோது, சுப்பையாநாடார் என் முன்னிலையிலும், சாட்சி முருகேசன் முன்னிலையிலும்

உயில் ஆவணத்தில்கையொப்பமிட்டார். நானும் முருகேசனும் அந்த உயிலில் சாட்சி கையொப்பமிட்டோம். அதனை சுப்பையாநாடார் பார்த்தார். உயில் எழுதப்பட்ட காலக்கட்டத்தில் சுப்பையாநாடார் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், நல்ல மனநிலையிலும் இருந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 உயில் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **வா.சா.ஆ.34** ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டையின் நகலை நான் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.35 ஆகும்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi